| 2014–15 | 338 | 56.65 |
| 2015–16 | 656 | 246.09 |
| 2016–17 | 843 | 218.77 |
| 2017–18 | 278 | 63.87 |
| 2018–19 | 474 | 220.75 |

**2018–19 ஆண்டில் செயல்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்**

1. 5 புதிய கல்லூரி விடுதிகள் ரூ.209.18 இலட்சம் செலவில் துவங்கப்பட்டன. (அரசாணை (நிலை) எண்: 80, பிவ, மிபிவ மற்றும் சிபா நலத்துறை நாள்:28.11.2018 )
2. 6 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக ரூ.14.85 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டது.
(அரசாணை (நிலை) எண்:62 பிவ, மிபிவ மற்றும் சிபா நலத்துறை நாள்:04.10.2018 )
3. 292 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு விளையாட்டு பொருட்கள் ரூ.38.63 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.
(அரசாணை (நிலை) எண்: 67 பிவ, மிபிவ மற்றும் சிபா நலத்துறை நாள்:24.10.2018 )
4. ஏழை பி.வ, மி.பி.வ. சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்த பயனாளிகளுக்கு கால்களால் இயக்கப்படும் தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தினை மேம்படுத்தி தையல் இயந்திரங்களுக்கு பதிலாக 3,000 எண்ணிக்கையிலான மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
(அரசாணை நிலை) எண்: 3 பிவ, மிபிவ மற்றும் சிபா நலத்துறை, நாள்:24.09.2018)
5. பி.வ, மி.பி.வ, சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் UPSC, TNPSC, TRB, RRB போன்ற போட்டித் தேர்வுகள் குறித்தும், அவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வகையில் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டும், 231 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.57.75 இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்குதல்.
(அரசாணை (நிலை) எண்: 60, பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:24.09.2018)
6. 21 பி.வ, மி.பி.வ, சீ.ம, சிறுபான்மையினர் நல மாணவியர் விடுதிகளுக்கு, சுற்றுச் சுவர் ரூ.235.28 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.
(அரசாணை (நிலை)எண்: 64 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:12.10.2018

7. 196 விடுதிகளுக்கு கூடுதலாக ஒரு சமையலர் பணியிடம் ரூ.415.48 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
(அரசாணை (நிலை) எண்: 78 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:20.11.2018

8. 5 வருடங்களுக்கு முன்னர் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள 99 பி.வ, மி.பி.வ, சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்படும் தொகை 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.
(அரசாணை (நிலை)எண். 65 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்: 12.10.2018 )

9. மீதமுள்ள 262 விடுதிகளுக்கு வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் ரூ.41.92 இலட்சம் செலவில் வழங்குதல்.
(அரசாணை (நிலை) எண்:59 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:24.09.2018)

10. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் பி.வ, மி.பி.வ,சிறுபான்மையினர் இன மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உணவு மானியத் தொகை நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 650 ரூபாயிலிருந்து 900 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதற்காக கூடுதலாக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
(அரசாணை (நிலை) எண்: 53 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:07.09.2018)

11. 3 துணை இயக்குநர் பணியிடங்கள் ரூ.25.76 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது.
(அரசாணை (நிலை) எண்: 76 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:20.11.2018)

12. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உள்ள கணினி, நகலிகள் (Copiers), பிரிண்டர்கள் மற்றும் தொடர்புடைய சாதனங்கள் ரூ.18.70 இலட்சம் செலவில் மாற்றியமைக்கப்பட்டது.
(அரசாணை (நிலை) எண்: 77 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:20.11.2018

13 502 பிவ,மிபிவ மற்றும் சீர்மரபினர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.502.00 இலட்சம் செலவில் கண்காணிப்பு கேமரா ( CCTV) பொருத்துதல் .
(அரசாணை (நிலை) எண்: 74 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:19.11.2018 )

14 பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 2018–19ஆம் ஆண்டில் கூடுதலாக 500.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
(அரசாணை (நிலை) எண்: 3 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:11.01.2019

15 10 கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் ரூ.299.68 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டன. (4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. )
(அரசாணை (நிலை) எண்: 71 பிவ, மிபிவ மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:7.11.2018

## 20. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழில் துவங்க குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கிவருகிறது. **1982** ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

**1993–94**ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முகவராக பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு கடன்திட்டங்களின் கீழ் கடன் தொகை வழங்க தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் நிதி உதவி செய்து வருகிறது.

**1993–94**ஆம் ஆண்டு முதல் இதுவரை இக்கழகத்திற்கு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், ரூ.**69436.27** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளது. இதுவரை **4,55,310** பயனாளிகளுக்கு ரூ.**78284.44** இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளது.

**2014-15 முதல் 2018–19 வரை வரையிலான கடன் திட்ட விவரங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2014–15 | | 2015–16 | | 2016–17 | | 2017–18 | | 2018–19 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் | தொகை | பயனாளி கள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை |
| 1 | பொதுக் கடன் திட்டம் | 370 | 194.59 | 910 | 437.43 | 994 | 900.18 | 709 | 392.32 | 479 | 642.34 |
| 2 | சிறுவணிகக் கடன் திட்டம் | 18640 | 5536.11 | 21656 | 7347.76 | 23517 | 9494.29 | 16641 | 7483.55 | 14121 | 7081.43 |
| 3 | புதிய பொற்காலத் திட்டம் | 141 | 78.50 | 242 | 119.93 | 481 | 210.32 | 118 | 48.38 | 308 | 146.90 |
| | மொத்தம் | 19151 | 5809.20 | 22808 | 7905.12 | 24992 | 10604.79 | 17468 | 7924.25 | 14908 | 7870.67 |

**சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்.**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு உயர் அளவாக ரூ.**1,00,000/–** வரை **50** விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சம் ரூ.**50,000/–** அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை **3180** சிறு, குறு விவசாயிகள் ரூ. **1460.25** இலட்சம் அரசு மானியமாகப் பெற்று பயனடைந்துள்ளனர்.

# 21. சிறுபான்மையினர் நல இயக்ககம்

தமிழக அரசு, சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி, மற்றும் பொருளாதார நிலைகளை பெரும்பான்மையினருக்கு நிகராக மேம்பாடு செய்திடும் சீரிய நோக்கில், இச்சமுதாய மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**தனி இட ஒதுக்கீடு**

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30 சதவீத இட ஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக 3.5 சதவீத தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அரசு பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியருக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது.

**கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்**

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு மைய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் கீழ்கண்ட கல்வி உதவித் தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது. மாணவ / மாணவியர் இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும். கல்வி உதவித் தொகைகள் மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் (DBT- Direct Benefit Transfer) மூலம் மாணவ, மாணவியருக்கு நேரிடையாக செலுத்தப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| கல்வி உதவித்தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ. |
|---|---|---|
| பள்ளிப்படிப்பு | 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை | 1 இலட்சம் |
| பள்ளி மேற்படிப்பு | 11 ஆம் வுகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு | 2 இலட்சம் |
| தகுதி மற்றும் வருவாய் அடிப்படை | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | 2.50 இலட்சம் |

கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் சிறுபான்மையினருக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்ட விவரம்.

**i.** பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

| ஆண்டு | மாணவ/ மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---:|---:|
| 2014-15 | 461376 | 7197.31 |
| 2015-16 | 402583 | 4557.39 |
| 2016-17 | 301949 | 5643.36 |
| 2017-18 | 353184 | 6927.42 |
| 2018-19 | 324556 | 6674.51 |

**ii.** பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

| ஆண்டு | மாணவ,/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---:|---:|
| 2014-15 | 73699 | 4329.63 |
| 2015-16 | 41704 | 2466.65 |
| 2016-17 | 37779 | 2091.23 |
| 2017-18 | 39193 | 2179.23 |
| 2018-19 | 34667 | 2051.88 |

**iii.** தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

| ஆண்டு | மாணவ/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---:|---:|
| 2014-15 | 6247 | 1713.18 |
| 2015-16 | 5227 | 1378.75 |
| 2016-17 | 4556 | 1139.12 |
| 2017-18 | 6105 | 1572.19 |
| 2018-19 | 4338 | 1139.94 |

**சிறுபான்மையின விடுதிகள்**

சிறுபான்மையின மாணவ / மாணவியர் விடுதிகளில் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக எவ்வித கட்டணமுமின்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் 16 சிறுபான்மையின விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

| விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | | ஒப்பளிக்கப்பட்ட மாணவ / மாணவியர் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மாணவ / மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | | |
| பள்ளி விடுதிகள் | -- | 4 | 4 | 350 | 238 |
| பள்ளி / கல்லூரி விடுதிகள் | -- | 5 | 5 | 250 | 221 |
| கல்லூரி விடுதிகள் | 1 | 5 | 6 | 600 | 525 |
| பொறியியல் கல்லூரி விடுதிகள் | 0 | 1 | 1 | 100 | 48 |
| **மொத்தம்** | **1** | **15** | **16** | **1300** | **1032** |

**விடுதிகளின் நிர்வாகத்திற்கென ஆண்டுவாரியான செலவிடப்பட்ட தொகை விவரங்கள் பின்வருமாறு.**

| ஆண்டு | ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014–15 | 175.20 | 175.18 |
| 2015–16 | 205.79 | 216.47 |
| 2016–17 | 324.96 | 194.69 |
| 2017–18 | 347.55 | 324.54 |
| 2018–19 | 383.13 | 362.65 |

**முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்**

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட / விதவை மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஆ.ஆ(நிலை) எண்.14, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.23.4.2007). ஒவ்வொரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்திற்கு விதைத் தொகையாக ரூ.1.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப 1:1 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வரை வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 1.4.2012 முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டு 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ரூ.20 இலட்சம் வரை (அ.ஆ(நிலை)எண்.109, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.8.10.2012) வழங்கப்படுகிறது.

நன்கொடை மற்றும் இணைமானியம் ஆகியவற்றின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தவிர தையல் பூ–வேலைப்பாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் இணை மானியத் தொகை வழங்கப்பட்ட விவரம்.

| ஆண்டு | இணை மானியம் விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2014–15 | 162.97 |
| 2015–16 | 165.84 |
| 2016–17 | 141.18 |
| 2017–18 | 104.05 |
| 2018–19 | 126.78 |

**கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்**

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான கிறித்துவ மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் அமைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அ.ஆணை (நிலை) எண்:70, பிவ, மிபிவ (ம) சிபா நலத் (சிநஆபி) துறை, நாள்.1.11.2018). இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நல வாரியம்**

தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷுர்கானாக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் உள்ளிட்ட பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளின் மேம்பாட்டிற்காக உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நலவாரியம் 2009–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு (அ.ஆ (நிலை) எண்.74, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.24.8.2009) செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல்வேண்டும். பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஓர் அடையாள அட்டை கட்டணமின்றி இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாரியத்தில் அலுவல் சார்ந்த /அலுவல் சாரா உறுப்பினர்களை திருத்தியமைத்து அ.ஆணை (நிலை). எண்.53, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.7.9.2017–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்களது பதவிக்காலம் 3 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும்.

இவ்வாரியத்தில் இதுவரையில் 14371 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 3578 உறுப்பினர்கள் மற்றும் அவரது குடும்பத்தார்கள் நல திட்ட உதவிகள் ரூ.**116.82** இலட்சம் பெற்று பயனடைந்துள்ளனர்.

இவ்வாரியத்தில் **31.3.19** வரை நலத்திட்டம் வாரியாக வழங்கப்பட்ட நிதியுதவி விவரம் பின்வருமாறு.

| திட்டம் | பயனாளிகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| கல்வி உதவித்தொகை | 1363 | 2063150 |
| திருமணம் | 328 | 656000 |
| மகப்பேறு | 263 | 1578000 |
| கருச்சிதைவு /கருகலைப்பு | 20 | 60000 |
| விபத்தினால் ஏற்படும் மரணம் | 5 | 500000 |
| இயற்கை மரணம் | 143 | 2145000 |
| இறுதிசடங்கு | 148 | 296000 |
| கண் கண்ணாடி | 1161 | 580500 |
| ஓய்வூதியம் | 147 | 3803450 |
| **மொத்தம்** | **3578** | **11682100** |

**ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினர் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ.**20000/–** வீதம் ஆண்டொன்றுக்கு **500** பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் **2011–12** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **2018–19** ஆம் ஆண்டு முதல் புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயனாளிகள் எண்ணிக்கை **500**–லிருந்து **600**–ஆக உயர்த்தியும், இவற்றில் **50** கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகள் பயணம் செய்ய அனுமதி அளித்தும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ.ஆணை (நிலை). எண்.**50**, பிவ, மிபிவ (ம) சிபா நலத்(சிநஆபி) துறை, நாள்.**31.8.18**).

இத்திட்டத்தின் கீழ் கடந்த **5** ஆண்டுகளில் பயணம் மேற்கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயணம் மேற்கொண்டவர்கள் | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2013-14 | 500 | 100.00 |
| 2014-15 | 468 | 93.60 |
| 2015-16 | 372 | 74.40 |
| 2016-17 | 460 | 92.00 |
| 2017-18 | 500 | 100.00 |

இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் **3,300** கிறித்துவர்கள் ரூ.**660** இலட்சம் நிதி உதவி பெற்று புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

**கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிக்கான அரசின் மானிய உதவி அளிக்கும் திட்டம்**

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதல் பணிகள் மேற்கொள்வதற்காக நிதியுதவி அளிக்கும் திட்டம் அரசால் **2016–17** ஆம் ஆண்டு (அ.ஆ (நிலை) எண்.**71**, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.**20.12.2016** (ம) அ.ஆணை(நிலை).எண்.**66**, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.**1.12.2017**) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென ரூ.**1** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தேவாலயம் குறைந்தபட்சம் **10** ஆண்டுகள் பயன்பாட்டில் இருக்க வேண்டும். தேவாலயங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரால் அமைக்கப்பட்ட குழுவின் ஸ்தல ஆய்வுக்குப்பின் கட்டட வரைபடம், கட்டடத்தின் வயது மற்றும் ஸ்திரத்தன்மை, பழுதுகள் மதிப்பீடு ஆகியவற்றை கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் நிதி உதவி குறித்து துறைத்தலைவருக்கு பரிந்துரை செய்யப்படும்.

**2018–19** ஆம் ஆண்டில், கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்காக ரூ.**17.92** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | மாவட்டம் | தேவாலயம் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | ஜெருசலேம் பிரேயர் தேவாலயம், கிருஷ்ணராயபுரம் | **1.00** |
| 2. | கரூர் | திறந்த வேதாகம தேவசபை தேவாலயம், காதப்பாறை | **1.92** |
| 3. | விழுப்புரம் | ஆர்.சி.லூர்து மாதா தேவாலயம், பெரமண்டூர் | **3.00** |
| 4. | விழுப்புரம் | ஆர்.சி. புனித சகாய மாதா தேவாலயம், வெளியனூர் | **3.00** |
| 5. | சேலம் | சி.எஸ்.ஐ.ஹட்ச் தேவாலயம், முத்தம்பட்டி | **3.00** |
| 6. | நாகப்பட்டினம் | செயின்ட் செபஸ்திரியன் தேவாலயம், ஈசனூர் | **3.00** |
| 7. | நாகப்பட்டினம் | புனித அந்தோணியார் தேவாலயம், கருங்கண்ணி | **3.00** |
| | | **மொத்தம்** | **17.92** |

கடந்த ஆண்டுகளில் நிதியுதவி வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | தேவாலயங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 2017–18 | 9 | 21.70 |
| 2018–19 | 7 | 17.92 |

இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் **12** மாவட்டங்களிலுள்ள **16** தேவாலயங்களுக்கு ரூ.**39.62** இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

## பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

தமிழ்நாட்டில் செல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையின மக்கட்தொகைக்கேற்ப, சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத்திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாரதப்பிரதமரின் புதிய 15 அம்சத்திட்டத்தின் கீழான திட்டவாரியான முன்னேற்ற அறிக்கைகள் பின்வருமாறு.

**i. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சேவைகளை சீராக கிடைக்கச் செய்தல் (சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை)**

தமிழ் நாட்டில் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் மொத்தம் 54439 அங்கன்வாடி மையங்கள் (49499 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 4940 குறு அங்கன்வாடி மையங்கள்) இயங்கி வருகின்றன. இதன் மூலம் மொத்தம் 3575868 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். இவற்றில் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த 296124 குழந்தைகள் அடங்குவர். 2018-19 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.231773.18 இலட்சம் செலவினத்தில் சிறுபான்மையினருக்கென ரூ.19193.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**ii. பள்ளிக்கல்வியை பெறுவதற்கான வாய்ப்பை அதிகரித்தல் (பள்ளிக் கல்வித்துறை)**

தமிழகத்தில் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் எவ்வித தடையுமின்றி சிறுபான்மையின மாணவ/மாணவியர் சேர்க்கப்படுகின்றனர். மேலும் மதவாரியான மற்றும் மொழிவாரியான சிறுபான்மையின குழந்தைகள் அதிகம் வசிக்கும் பகுதியில் போதுமான எண்ணிக்கையில் பள்ளிகள் உள்ளன.

அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA) மற்றும் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா பள்ளி (KGBVS) திட்டங்களின் கீழ் 2018-19 –ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட சாதனை விவரம் பின்வருமாறு.

**(ரூ.இலட்சத்தில்)**

| திட்டத்தின் பெயர் | இருப்பிலுள்ள நிதி | செலவினம் | விழுக்காடு (%) | குறிப்பு |
|---|---|---|---|---|
| **SSA** | 175211.02 | 174484.28 | 99.59 | இச்செலவினத்தில் சிறுபான்மையினரும் அடங்குவர் |
| **KGBV** | 2324.40 | 2213.39 | 95.22 | |

**iii. உருதுமொழியை கற்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் (பள்ளிக் கல்வித்துறை)**

பள்ளி கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலத்தில் உருது மொழியை முதல் பாடமாகக் கொண்டு தொடக்க /இடைநிலை/ உயர்நிலை/மேல்நிலை பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் உருதுமொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு மாணவ, மாணவியர் உருதுமொழியை முதல் பாடமாகக் கொண்டு பயின்று வருகின்றனர்.

**iv. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல் (பள்ளிக் கல்வித்துறை)**

மதரஸா கல்வி முறையை நவீனமயமாக்கும் திட்டமானது, சிறுபான்மை நிறுவனங்கள் / பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாடு திட்டம் என ஒரு தனித்திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்படி, சிறுபான்மை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கருத்துருக்கள் பள்ளிக் கல்வித் துறை செயலர் அவர்களின் தலைமையிலான மாநில அளவிலான மானியக்குழுவில் வைக்கப்பட்டு, அவை குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமையின் அடிப்படையில் நிதி ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

**v. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ/மாணவியருக்கு உதவித்தொகை வழங்குதல்.**

அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களில் 1–ஆம் வகுப்பு முதல் தொழிற் கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு மத்திய அரசு மூன்று வகையாக கல்வி உதவித்தொகை திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**v(i). பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2018–19 ஆம் ஆண்டில் 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் 3,24,556 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ரூ.6,674.51 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**v(ii). பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2018–19 ஆம் ஆண்டில் இதுவரையில் பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (ஐ.டி.ஐ, ஐ.டி.சி, தேசிய தொழில் நெறிப் பயிற்சி குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகள் (NCVT) பாலிடெக்னிக், ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டயப்பயிற்சி, இளங்கலை பட்டப்படிப்புகள், எம்.பில் உட்பட) பயிலும் 34667 சிறுபான்மையின மாணவ/மாணவியருக்கு ரூ.2051.88 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**V(iii) தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2018-19 ஆம் ஆண்டில் தொழிற்கல்வி/தொழில் நுட்பக்கல்வி பயிலும் 4338 சிறுபான்யையின மாணவ, மாணவியருக்கு ரூ.1139.94 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**vi. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக்கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துவது (கல்வித்துறை)**

இந்நிறுவனத்தின் மூலம் இதுவரையில் கல்வியில் சிறந்து விளங்கும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 20839 மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 22.96 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**vii. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்**

**அ. தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (DAY – NRLM)**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர்களை இலக்காக கொண்டுள்ளது. இலக்கு மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்காக அவர்களைக் கொண்டு செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் அமைக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**i. சுய உதவி குழு உருவாக்குதல்**

2018–19–ஆம் ஆண்டிற்கு 5000 சுய உதவி குழுக்கள் (புதிது மற்றும் புதுப்பித்தல்) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 898 குழுக்கள் சிறுபான்மையினருக்கு உரியதாகும்.

**ii. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

2018–19–ஆம் ஆண்டில் ஒரு சுய உதவி குழுவிற்கு ரூ.15,000/– வீதம் 1085 சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.1.62 கோடி சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**iii. சமுதாய முதலீட்டு நிதி**

இத்திட்டத்தின் கீழ் 2018–19–ஆம் ஆண்டில், பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு சுய உதவி குழுவிற்கு ரூ.75,000/– வரை 9% வட்டி விகிதத்தில் சிறுபான்மையினருக்கு 2933 சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் ரூ.13.89 கோடி சிறுபான்மையினருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

### ஆ. திறன் மேம்பாடு மற்றும் பணியமர்வு திட்டம்

**i. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி**

திறன் பயிற்சி திட்டமானது 2012–ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வந்து பின்னர் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா என பெயர் மாற்றப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் கீழ்க்கண்ட முக்கிய பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆட்டோ மொபைல், சுகாதாரம், தோல் மற்றும் தோல் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், சில்லறை வர்த்தகம், ஆயத்த ஆடைகள், வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு மற்றும் அழகு கலை, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மின் மற்றும் மின்னணு, கட்டுமானம், விவசாய பண்ணை உபகரணங்கள் பராமரிப்பு, வெல்டிங், தொழிற்சாலைகளின் உற்பத்தி சம்பந்தமானவை, தளவாடங்கள் மற்றும் விநியோகத் தொடர் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலியவை.

இப்பயிற்சி திட்டத்தின் கீழ் 2018–19 ஆண்டில் சிறுபான்மையினருக்கு ரூ. 2.03 கோடி செலவில் 238 சிறுபான்மையினருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### இ. தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)

தீன் தயாள் அந்தியோதய யோஜனா–தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சாரஅடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்புறங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித்தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை கீழ்மட்ட நிலையிலிருந்து இலாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்தல்.

2018–19 ஆம் ஆண்டிற்கான திட்டவாரியான சாதனைகள் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | திட்டம் | மொத்த இலக்கு | சிறுபான்மை யினருக்கான இலக்கு | சிறுபான்மையினருக்கான இலக்கின் மீதான சாதனை | | சாதனை சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | பயனாளிகள் விவரம் | தொகை (ரூ.கோடியில்) | |
| 1 | சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு | 10000 | 1453 | 800 | –– | 55 % |
| 2 | சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் | 10000 | 1331 | 792 | 8.16 | 60% |
| 3 | தனி நபர் சுய வேலை வாய்ப்புத் திட்டம் | 10000 | 1389 | 810 | 2.19 | 58% |
| 4 | குழுக்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் | 6000 | 946 | 556 | 5.17 | 59% |

**viii. தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல்: (தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை)**

இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு தங்கள் திறனை வளர்த்து அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறுபான்மையினர் அதிகம் இருக்கும் இடத்தில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை துவக்கியும் ஏற்கனவே உள்ள பயிற்சி நிலையங்களின் தரம் உயர்த்தவும் படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் கீழ் 563 தொழிற்பயிற்சி நிலையங்கள் ( **87** அரசு (ம) **476** தனியார்) இயங்கி வருகின்றன. இவற்றில் 2018-19 ஆம் ஆண்டில் பயின்ற 43398 மாணவ / மாணவியர்களுள் 3423 மாணவ, மாணவியர் சிறுபான்மையினர் ஆவார்.

**ix. (a) பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவியை அதிகரிக்கச் செய்தல்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) மூலம் சிறுபான்மையின மக்களுக்கு குறைந்த வட்டியில் பொருளாதார கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. 2018-19 ஆம் ஆண்டில் மொத்தம் 7708 பயனாளிகளுக்கு ரூ.4019.97 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

**(b) சிறுபான்மையினருக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குதல்**

பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்கும் கடன்களில் **15%** சிறுபான்மையினருக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **31.12.2018** உடன் முடிவடைந்த காலாண்டில் 672194 சிறுபான்மையினருக்கு ரூ.15046.66 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**x. மாநில மற்றும் மத்திய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு**

இஸ்லாமியர்களுக்கென அரசு பணிகளில் வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக **3.5** சதவீத தனி இடஒதுக்கீடு திருத்திய இனச்சுழற்சியின்படி வழங்கப்பட்டு வருகிறது.

**xi. ஊரக வீட்டு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு (ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை)**

பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டி தரப்படுகிறது. மொத்த ஒதுக்கீட்டில் சிறுபான்மையினருக்கு உரிய ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017-18 ஆம் ஆண்டிற்கு மொத்தம் **130214** வீடுகளில் சிறுபான்மையினருக்கு **6511** வீடுகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதுவே **2018–19** ஆம் ஆண்டிற்கு முன்கொணரப்பட்டு இவற்றில் சிறுபான்மையினருக்காக ரூ.1479.91 இலட்சம் செலவில் **901** குடியிருப்புக்கள் கட்டப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**xii. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப்பகுதிகளின் நிலையை மேம்படுத்துதல் (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை)**

மத்திய அரசு திட்டத்தின் கீழ் **2018–19** ஆம் ஆண்டிற்கு சிறுபான்மையினருக்கென **2995** குடியுருப்புக்கள் கட்டுவதற்க்கு மொத்தம் ரூ.**89.85** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இவற்றில் சிறுபான்மையினர்களுக்கு 3295 குடியுருப்புக்கள் ரூ.107.08 கோடி செலவில் கட்டப்பட்டு 100 சதவீததிற்க்கு மேலாக இலக்கு எய்தப்பட்டுள்ளது.

**xiii (ம) xiv. இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் இனக்கலவரத்தினை தூண்டுவோருக்கு தண்டனை**

இனக்கலவரங்களைத் தடுத்தல் தொடர்பாக மைய அரசின் அறிவுரைப்படி காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் தொடர்புப் பிரிவு **(Nodal Cell)** அமைக்கப்பட்டு, அதற்கு காவல் கண்காணிப்பாளர், சிறப்புப் பிரிவு, நுண்ணாய்வுத் துறை, சென்னை–4 அவர்கள் தொடர்பு அலுவலராக **(Nodal Officer)** நியமிக்கப்பட்டுள்ளார். இப்பிரிவு மாநிலத்தில் இனக்கலவரங்கள் நிகழாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தும் உரிய விவரங்களைச் சேகரித்தும் பராமரித்தும் வருகிறது.

**xv. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு**

சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்து இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள், சிறு குற்றங்களுக்காக தண்டனைப் பெற்று சிறையிலிருந்து வெளிவந்தவர்கள், உடல் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் சமுதாயத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்காக சிறுவணிகம் மேற்கொள்ள மறுவாழ்வு நிதியுதவியாக தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறைச் சென்று வெளிவந்த 14 பயனாளிகளுக்கு ரூ.1.40 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| சிறுபான்மையினர் நலத்துறை | | |
|---|---|---|
| திட்ட வாரியான செலவினம் 2018-19 | | |
| வ. எண். | மாநில செலவினம் | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
| 1 | நிர்வாகம்–சிறுபான்மையினர் நல இயக்ககம் .. 152.22<br>சிறுபான்மையினர் நல பிரிவு (மாவட்டங்கள்) – 267.46 | **419.68** |
| 2 | முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் | **126.78** |
| 3 | கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்ள அரசு உதவித்தொகை | **106.58** |
| 4 | சிறுபான்மையின மாணவியர் விடுதிகள் | **362.65** |
| 5 | சிறுபான்மையின வகுப்பின மாணவியர் இல்லங்கள் கட்டுதல் | **17.11** |
| 6 | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | **100.00** |
| | **மொத்தம்** | **1132.8** |
| 7 | வக்ஃபு தீர்ப்பாயம் | **87.69** |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் | | |
| 8 | பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை | **6674.51** |
| 9 | பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை | **2051.88** |
| 10 | தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை | 1139.94 |
| | **மொத்தம்** | **9866.33** |
| | **நிகர மொத்தம்** | **11086.82** |

## 22. சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டின் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர்கள் பயன் பெறும் வகையில் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956 பிரிவு 25ன் படி 31.08.1999 ல் பதிவு செய்யப்பட்டது. சிறுபான்மையினர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பிரதான குறிக்கோள் ஆகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2.05 கோடியாகும். இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்த கடனாகப் பெற்று வழங்குகிறது.

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் முகவராக இக்கழகம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கீழ்கண்டவாறு தனிநபர்கடன்,சிறுகடன் மற்றும் கல்விக்கடன் வழங்கப்படுகிறது.

**துணை முகவர்கள்**:

இக்கழகத்தின் கடன் உதவித் திட்டங்கள் துணை முகவர்களான மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்/ நகர கூட்டுறவு வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் / தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருமாறு :

**I. தனிநபர் காலக்கடன் திட்டம்**

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பின்வருமாறு தனிநபர் காலக் கடன்களை வழங்குகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I** ரூ.20,00,000 வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000/– நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000/- |
| 2 | **கடன் திட்டம் II** ரூ.30,00,000 வரையிலான கடன்களுக்கு | ஆண்களுக்கு 8% பெண்களுக்கு 6% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை உள்ளவர்கள். |

தனிநபர் காலக் கடன் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கும் மற்றும் ஆட்டோக்கள் வாங்குவதற்கும் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் **2018–2019** ஆம் ஆண்டில் **2,054** பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.**1,440.91** இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**II. சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் திட்டம்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சுய உதவி குழு உறுப்பினர்கள் (ஆண் மற்றும் பெண் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள்) பலகாரக்கடை, சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சுய உதவிக் குழுவில் உள்ள நபர்களுக்கு சிறுகடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I**<br>ரூ.1,00,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் II**<br>ரூ.1,50,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு)) | ஆண்களுக்கு 10%<br>பெண்களுக்கு 8% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை உள்ளவர்கள். |

இத்திட்டத்தின் கீழ் **2018–2019** ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம் **5,645** பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.**2,565.91** இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**III. கல்விக் கடன்**

அரசு /அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் இந்தியாவில் “தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | பெற்றோரது ஆண்டு வருமான உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |

| | | | |
|---|---|---|---|
| 2 | <u>**கடன் திட்டம் – II**</u><br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | மாணவர்களுக்கு 8%<br>மாணவியருக்கு 5% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை உள்ளவர்கள். |

இத்திட்டத்தின் கீழ் 2018–2019 ஆம் ஆண்டில் 9 மாணவிகளுக்கு ரூ.13.15 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் விவரம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | பயனாளிகள் | தொகை |
|---|---|---|
| 2014-15 | 8664 | 3119.74 |
| 2015-16 | 7350 | 2973.13 |
| 2016-17 | 6147 | 2584.31 |
| 2017-18 | 6847 | 3465.55 |
| 2018-19 | 7708 | 4019.97 |

## 23. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழி வாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும் அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

மாநில சிறுபான்மையினர் ஆணையமானது தமிழ்நாட்டில் சட்ட பூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக, தமிழ்நாடு மாநிலசிறுபான்மையினர் ஆணைய சட்டம் 2010 (Act 21 of 2010) ன்படி 1.8.2010 முதல் இயங்கி வருகிறது

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அரசாணை (நிலை) எண். 30, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 8.3.2019–இன்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களுடன் 3 ஆண்டு காலத்திற்கு திருத்தியமைக்கப்பட்டது.

### ஆணைய உறுப்பினர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | திரு. டி. ஜான் மகேந்திரன் | தலைவர் |
| 2. | டாக்டர். ஜி. கோவிந்தராஜ்வர்தனன் | உறுப்பினர் |
| 3. | முனைவர். ஜே,ஆஜீத்பிரசாத் ஜெயின் | உறுப்பினர் |
| 4. | திரு. அ. முகம்மது ஜான் | உறுப்பினர் |
| 5. | திரு. ஜவகர் அலி | உறுப்பினர் |
| 6. | முனைவர். அருள்தந்தை. ஜெபமாலை இருதயராஜ் சே.ச. | உறுப்பினர் |
| 7. | சர்தார் மன்ஞ்ஜித் சிங் நய்யர் | உறுப்பினர் |
| 8. | திரு.ஹர்பிந்திர் சிங் | உறுப்பினர் |
| 9. | திரு. அ. ராஜன் | உறுப்பினர் |
| 10. | திரு. விடிஎஸ்.டி. கௌதம் குமார் | உறுப்பினர் |
| 11. | ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை | உறுப்பினர்-செயலர் |

### ஆணையத்தின் பணிகள்

அ) சிறுபான்மை இனத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மற்றும் நெறிமுறைகள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறித்து ஆராய்ந்து மறு மதிப்பீடு செய்தல்.

ஆ) இதுபோன்ற நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி, நடைமுறைக்கு கொண்டு வரும் பொருட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது அமைப்புகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல்.

இ) தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் நலனுக்கென உள்ள அரசின் கொள்கை மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடு குறித்து ஆய்வு பணி மேற்கொள்ளுதல்.

ஈ) சிறுபான்மையினருக்கெதிராக வேறுபாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தேவைப்படும் கருத்துகளை அரசுக்கு தெரிவித்தல்.

உ) சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நல திட்டங்கள் குறித்து உரிய கருத்துகளை தெரிவித்தல்.

ஊ) மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான வழிவகைகளை அரசுக்கு பரிந்துரைத்தல்.

எ) வரையறுக்கப்பட்ட கால இடைவெளியில் மாநில அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

### சிறுபான்மையினர்—வகைப்பாடு

#### அ) மதவழி சிறுபான்மையினர்

கிறித்துவர்கள், இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர், பார்சிகள் (ஜொராஷ்டிரியர்கள்) சமணம் (ஜெயின்) சமயத்தைச் சேர்ந்தவர்கள் மதவழி சிறுபான்மையினத்தவராக கருதப்படுகின்றனர்.

#### ஆ) மொழிவழி சிறுபான்மையினர்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 29 மற்றும் 30—ஆம் பிரிவுகளில் மொழிவழி சிறுபான்மையினர் எனப்படுபவர்கள் இந்திய மாகாணத்தின் ஒரு பகுதியில் அவர்களுக்கென்று சொந்தமான குறிப்பிட்ட மொழி மற்றும் எழுத்து ஆகியவற்றைக் கொண்டவர் ஆவர். சிறுபான்மையினரின் மொழி என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 22 மொழிகளில் ஒரு மொழியாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அஃதாவது மாநில அளவில் மொழிவாரிச் சிறுபான்மையினர் என்பது அந்த மாநில அளவில் அல்லது மாவட்ட மற்றும் வட்ட அளவுகளில் உள்ள முதன்மை மொழியிலிருந்து வேறுபட்ட ஒரு மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் என்று பொருள் கொள்ளப்பட வேண்டும்.

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் செயல்பாடுகள்

இந்த ஆணையம் சிறுபான்மையின மக்கள் மற்றும் அவர்தம் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து அவர்களால் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளை இந்த ஆணையம் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சனைகளைக் கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திட அரசுக்குத் தக்க பரிந்துரைகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செய்து வருகிறது.

## 24. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, **15.3.1993** முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

**2.** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்வரம்புகளாவன:–

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்குதல்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)** மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குதல்.

## 25. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

### 1. வக்ஃப் வாரியம் அமைத்தல்

வக்ஃப் சட்டம் 1954 தமிழகத்தில் 15.01.1955ல் அமல்படுத்தப்பட்டது. முதல் வாரியம் 18.01.1958ல் அமைக்கப்பட்டது. 1995–ம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மைய அரசு சட்டம் 43/1995) 01.01.1996 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 13 உறுப்பினர்களைக் கொண்டு வாரியம் 10.06.1997 அன்று அமைக்கப்பட்டது. வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் இவ்வாரியத்தில் 11 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.

### 2. வக்ஃப் தீர்ப்பாயம் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் நிலஅளவை

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் வக்ஃப் சட்டம் 1995 பரிவு 83ன்படி சென்னையில் அமைக்கப்பட்டு 06.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ் நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 19 மாவட்டங்களிலுள்ள 2128 வக்ஃப் சொத்துக்கள் நிலஅளவை செய்யப்பட்டுள்ளன.

### 3. நிர்வாக மானியம்

வக்ஃபு நிறுவனங்களிலிருந்து சகாயத் தொகையில் பெறப்படும் வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃபு வாரிய நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழக அரசு இப்பற்றாக்குறையை ஈடு செய்ய ஒவ்வொரு ஆண்டும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழக அரசு நிர்வாக மானியத்தை 2017–2018 ஆண்டு முதல் ரூ.1 கோடியிலிருந்து ரூ. 2 கோடியாக உயர்த்தி வழங்க ஆணையிட்டது. நிர்வாக மானியமாக 2018–2019ம் ஆண்டிற்கு ரூ.2 கோடி வழங்கப்பட்டது.

### 4. பழுதுப்பார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுதுபார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது. இவ்வகைக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு ரூ.60 இலட்சம் மானியமாக வழங்கி வருகிறது. மானியத் தொகை வழங்கப்பட்ட விவரம் மற்றும் பயனடைந்த வக்ஃபு நிறுவனங்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

| வ.எண். | ஆண்டு | வழங்கப்பட்ட மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பயனடைந்த வக்ஃபு நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2014–15 | 60 | 36 |
| 2. | 2015–16 | 60 | 39 |
| 3. | 2016–17 | 60 | 28 |
| 4. | 2017–18 | 60 | 38 |
| 5. | 2018–2019 | 60 | 33 |

**5. மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு மானியம்**

முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4 (2)ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.67,800 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**6. உலமா ஓய்வூதிய திட்டம்**

1981–ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர்.. உலமா ஓய்வூதிய தொகையை தமிழக அரசால் அரசாணை (நிலை) எண்.57, பிப, மிபிப மற்றும் சி.ந (எஸ்1) துறை நாள்.17.11.2016 ன்படி மாதம் ரூ.1000/– லிருந்து மாதம் ரூ.1500/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டிற்கு ரூ.3.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு உலமா ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டது.

**7. வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புக்கான தொகுப்பு நிதி**

வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி ( Corpus fund ) உருவாக்கப்பட்டுள்ளது

**8. காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்**

தமிழ்நாட்டில் பணியாற்றும் காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000/– மதிப்பூதியம் தமிழக அரசு வழங்கி வருகிறது.

## 26. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

ஹஜ் புனிதப் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் புதுதில்லி, சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் சிறப்பாகச் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் ஹஜ் குழு சட்டம் 2002 (மத்திய சட்டம் 35/2002)–ன்படி மூன்றாண்டு காலத்திற்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 12 உறுப்பினர்களைக் கொண்டு தமிழக அரசால் 2017 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக திரு. அ. அப்துல் ஜப்பார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஒதுக்கீடு, திருத்திய ஒதுக்கீடு மற்றும் ஹஜ் பயணம் மேற்கொண்டவர்கள் பற்றிய விவரம்:-**

| வருடம் | ஒதுக்கீடு | திருத்திய ஒதுக்கீடு | ஹஜ் பயணம் மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2014–15 | 2361 | 2672 | 2855 + 3 (குழந்தைகள்) |
| 2015–16 | 2361 | 2486 | 2653 + 3 (குழந்தைகள்) |
| 2016–17 | 2310 | 2399 | 2465 + 1 (குழந்தை) |
| 2017–18 | 3014 | 3189 | 3292 + 4 (குழந்தைகள்) |
| 2018–19 | 3042 | 3542 | 3816 + 4 (குழந்தைகள்) |

**நிர்வாக மானியம்**

பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல் மற்றும் இதர நிர்வாக செலவினங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அரசு நிர்வாக மானியத்தை வழங்கி வருகிறது. 2018–19–ஆம் ஆண்டு முதல் மானியத்தை ரூ.30.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக அரசு உயர்த்தி வழங்குகிறது. கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்பட்ட நிர்வாக மானியம் குறித்த விவரங்கள் பின்வருமாறு.

| வ.எண் | வருடம் | ஒப்பளிக்கப்பட்ட நிர்வாக மானியம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2014–15 | 30.00 |
| 2. | 2015–16 | 30.00 |
| 3. | 2016–17 | 30.00 |
| 4. | 2017–18 | 30.00 |
| 5. | 2018–19 | 50.00 |

**ஹஜ் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வுக்குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கான மானியம்.**

கட்டடத் தேர்வுக் குழுவில் உறுப்பினரை அனுப்புவது மற்றம் ஹஜ் தன்னார்வத் தொண்டர்களை சவூதி அரேபியா அனுப்புவதற்கு ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அரசு மானியமாக வழங்கி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் இந்நேர்வுக்காக அரசால் வழங்கப்பட்ட மானியம் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | அனுப்பப்பட்ட ஹஜ் தொண்டர்களின் எண்ணிக்கை | அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014–15 | 9 | 17.28 |
| 2015–16 | 9 | 9.58 |
| 2016–17 | 12 | 13.14 |
| 2017–18 | 16 | 17.20 |
| 2018–19 | 19 | 23.20 |

**ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு அரசு ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தினை 2018–2019 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.6 கோடி மானியமாக வழங்கப்படுகிறது.

2018–2019 ஆம் ஆண்டில் 3,769 ஹஜ் பயணிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.